தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்.

தொகுதி VI. } துந்துபி௵ ஆடி௴ } பகுதி 4.

இரேக்க நாட்டுக் கதைகள்
Greek Stories

மெலெயாஜெர்
Meleager

முன்னொரு காலத்தில் பலவளமும் செழித்திருந்த ஏடோலியா நாட்டின் தலைநகரான காலிடான் என்னும் பட்டினத்தில் ஆய்ன்யூஸ் என்ற அரசன் சிற்றரசு புரிந்து வந்தான். அவனது மனைவிக்கு ஆல்தீயா என்று பெயர். காலக்கிரமத்தில் எல்லா இராஜலக்ஷணங்களும் பொருந்திய ஆண் குழந்தை யொன்று அவளுக்குப் பிறந்தது அக் குழந்தைக்கு மெலெயாஜெர் என்று பெயரிட்டனர். அம் மகவும் நாளுக்கு நாள் நன்கு வளர்ந்து வந்தது

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அந்தக் குழந்தையைப் பார்க்க மூன்று கிழவிகள் அரசனது அரண்மனைக்கு வந்தனர். அவர் சாதாரண மானுடக் கிழவிகள் அல்ல. மனிதரது ஆயுளாம் நூலை நூற்கும் மூவ் விதிகளே யவர்; திரி

காலஞானியர் ; மானுட உருக்கொண்டு அங்கு வந்தனர். அவர் குழந்தையின் அண்டையில் வந்து நின்றுகொண்டு அதை உற்று நோக்கினர். "குழந்தை நாளுக்கு நாள் நன்ருக வளரும். மிகவும் திடமான சரீரத்தை உடைத்தாயி ருக்கும். அதன் தகப்பனைவிட அழகாயிருக்கும்" என்ருள் முதல்வள். "இதன் கீர்த்தி உலகெங்கும் பரவும்" என்ருள் இன்னெருவள். "அதோ, அடுப்பில் கிடக்கிறதே கொள்ளிக் கட்டை—அந்தக் கொள்ளிக்கட்டை எரிந்து போகும் வரை தான் இந்தக் குழந்தை உயிரோடிருக்கும்" என்ருள் மூன்ரு மவள். இவ்வாறு ஒருவர்க் கொருவர் பேசிக் கொண்டே அவர் வந்த வழிபோயினர்.

இவர்கள் தம்முள் பேசிக்கொள்வதில் ஒரு வார்த்தை கூட விடாது ஆவலுடனும் கவலையுடனும் ஒளிந்து கேட் டுக்கொண்டிருந்த ஆல்தீயாவின் மனம் முதலிருவர் கூறிய மொழிகளைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியுற்று மூன்ருமவள் சொன்னதைக் கேட்டதும் திடுக்குற்றது. அக் கிழவிகள் வெளியே சென்றதும் ஆல்தீயா மிகவும் பரபரப்புடன் அடுப்பண்டை போய் அவ் விறகைப் பிடுங்கித் தண்ணீரை அதன் மீது தெளித்து அதை அணைத்துத் தன்னுடைய ஆபரணங்களோடு கொண்டு சேர்த்துப் பத்திரப்படுத்தினுள். அதைத் தினம் பல முறைபோய்ப் பார்த்துக் காப்பாற்றி வந்தாள்.

விதிக் கிழவிகள் கூறியபடியே மெலெயாஜெர் நாளுக்கு நாள் அழகிலும் கல்வியிலும் விருத்தியடைந்து வந்தான். இராஜ புத்திரர்களுக்குரிய எல்லா வித்தைகளையும் அவன் எளிதில் கற்றுக்கொண்டான். அவனது உடலின் அழகை யும் களைபொருந்திய முகத்தையும் பார்த்துப் பார்த்து ஆல்தீயா அடைந்த பெருமைக்கு அளவே இல்லை.

அழகுக்கேற்ற அமைப்பும், அமைப்புக்கேற்ற திறனும், திறனுக்கேற்ற திடமும் பெற்றிருந்த மெலெயாஜோனவன், பொன்னாட்டின் தோலைக் கவர்ந்துவர ஜேஸன் சென்றபோது அவனுடன் அயல் நாடு சென்றனன்.

அவ்வாறு அழியாப் புகழை நாடிச் சென்ற மெலெயாஜோர் போன காரியத்தை முடித்துக்கொண்டுவரும் முயற்சிகளினிடையில் பல வருஷங்கள் கழிந்தன. அவனது தகப்பனாகிய ஆய்ன்யூஸ் அரசன் தனது மகனைப் பற்றிக் கவலை கொண்டு, அவனைச் சௌக்கியமாகக் காத்து வீடு கொண்டு சேர்ப்பதற்காகவும், வருஷாவருஷம் சுபிக்ஷமாகத் தனக்கு தனதானியங்களை அளித்துவருவதற்காகவும் தனது தெய்வங்களைக் கொண்டாடுவதென்று தீர்மானித்தான். அவர்களை நாடிச் சிறப்பாகத் திருவிழா வொன்றை நடத்தினான். அப்பொழுது டிமீடர்க்குத் தானியத்தையும், டையோனைஸஸ்ஸுக்குக் கள்ளையும், அதீனி தேவிக்கு ஒலிவ் எண்ணெய்யையும், ஒழுங்காகவும் சிறப்பாகவும் நைவேத்தியம் பண்ணினான். மறதியால் ஆர்டிமிஸ் தேவிக்கு நைவேத்தியம் பண்ணத் தவறிவிட்டான். கர்வம் மிகுந்த அத் தேவ கன்னி அவன் தன்னை வேண்டுமெனவே இகழ்ந்து அவமதித்ததாகக்கருதி அவன்மீது அடங்காக் கோபம் கொண்டாள். அவன் செய்த தவறுக்காக அவனைத் துன்பத்துக்குள்ளாக்குவதென்று சபதம் செய்தாள். தனது நாட்டின் செழுமை பற்றி அந்தச் சிற்றரசன் தன்னை நிராகரித்தான் என்று எண்ணிய அந்தத் தேவிக்கு அவனது அகந்தைக்குக் காரணமாகிய நாட்டின் செழிப்பைத் தொலைப்பதே சரியான தண்டனையாகு மென்று தோன்றிற்று. உடனே மிகப்பெரியதொரு காட்டுப் பன்றியைச் சிருஷ்டித்து "அரசனது நாடனைத்தையும் பாழாக்கி வளம் அனைத்தையும் தொலை"

என்று அதை ஏவினாள். அக் கொடிய மிருகத்தின் கண் களினின்று தீப்பொறிகள் பறந்தன; வாயினின்று சுவாலை கிளம்பியது ; அதன் உடலெங்கும் கத்திபோன்று கூரிய மயிர் செறிந்திருந்தது ; அதன் கோரப்பற்கள் யானையின் கொம்பைவிட மிகப்பெரியதாயும் வெகு கூர்மையாயும் இருந் தன ; அது காட்டில் சஞ்சரிக்கும்போது அது விடும் மூச் சின் வெப்பத்தால் செடிகள் கருகின, புதர்கள் பொசுங் கின ; அதன் மீது பட்ட மரங்கள் ஒடிந்து விழுந்தன. அது சென்ற இடமெங்கும் கதிர்கள் மிதிபட்டு அழிந்தன: ஆடுமாடுகள் மூலைக்கு மூலை வெருண்டோடின: மனிதர் தலை காட்டப் பயந்து ஓடி ஒளித்தனர். பறிப்பாரின்றிப் பழங்கள் உதிர்ந்து அழுகி வீண்போயின. அறுவடை செய்வாரின்றிக் கதிர்க்குலைகள் உலர்ந்து வாடி உதிர்ந்துபோயின. கோப முற்ற தேவியினால் ஏவப்பட்ட பன்றி விளைத்த சேதத் துக்குக் கணக்கு வழக்கேயில்லை.

இவ்வாறு நாடு கலங்கிக் குழம்பும் நாளில் மெலெ யாஜெர புகழைச் சூறையாடிக் கொண்டு வீடுவந்து சேர்ந்தான்.

பொதுவாக, அயல்நாடு சென்றவர் திரும்பிவந்தால் அவரைப் பார்க்கவும், அவர் கண்ணுற்ற காட்சிகளென்ன அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவை என்று கேட்கவும் எல்லாரும் ஆவலுடன் கூட்டம் கூடுவது வழக்கம். அதி லும் பொன்னாட்டின் தோலைக் கவரச் சென்று அமானு ஷிகச் செயல்களை இயற்றி அத்தியாச்சரியக் காட்சிகளைக் கண்ணுற்று அரிதில் திரும்பிவந்தால் கேட்பானேன். ஆயி னும் மெலெயாஜெரின் விருத்தாந்தங்களைக் கேட்க ஒரு வரும் முன்வந்திலர். அவன் எதிர்பார்த்த பிரிய மொழிகளும் தோத்திரமொழிகளும் அவன் காதில விழவில்லை. அதற்குப்

பதிலாக "வீட்டில் கொள்ளைபோகிறபோது பிறநாடுகளுக்குச் சென்று செல்வத்தையும் புகழையும் தேடுவதில் என்ன பயன்?" என்னும் ஏச்சுவார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. இராஜகுமாரன் வெகு நாட்களுக்கப்புறம் வீடுவருகிறனென்று வீதிகள் அலங்கரிக்கப்படவில்லை. எங்கும் ஒடிந்த மரமும் சரிந்த கதிரும உதிர்ந்த பழமும் இருப்பதையும் நாடெங்கும் பாழாய்க் கிடைப்பதையும் கண்டான்.

இதெல்லாம் பன்றியின் செயலென்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டான். உடனே பன்றியை வேட்டையாடிக் கொல்லத் தீர்மானித்தான். அதன் அளவையும் உருவத்தையும் செயல்களையும் பார்த்தும் கேட்டுமிருந்த அந் நாட்டினர் பயந்து பின்வாங்கினர். ஆயினும் அயல்நாடு சென்று தன்னோடு திரும்பி வந்த வீரரிற் சிலர், அச்சமென்பது இன்னதென்று அறியாத நெஞ்சத்தினர், புகழைக் கொள்ளைபோடுவதில் அடங்காத அவாவுள்ளவர், அவனுடன் கூடச்சென்று பன்றி வேட்டையாட ஆவலோடு முன்வந்தனர். இத்தகைய சூரரின் துணை போதுமென்று நினைத்த அந்நாட்டினரும் சிலர் துணிந்து வேட்டையாட முன்வந்தனர்.

மேலெயாஜெர் முதலியோர் குறிப்பிட்ட ஒரு நன்னாளில் காலிடான் நகரின் பிராந்தத்திலுள்ள கோரப் பன்றியை வேட்டையாடப் போகிறார்களென்று எங்கும் பறைசாற்றுவிக்கப்பட்டது. அதைக் கேட்டு இன்னும் சில சூரர் அங்கு வந்து சேர்ந்தனர்.

அவ்வாறு வந்தவர்களுள் அடலண்டா என்பவள் ஒருத்தி. அவள் ஓர் அரசனது மகள். அவ்வரசன் தனக்கு ஒருபிள்ளைக் குழந்தை வேண்டுமென்று வெகு நாளாகக் கடவுளை பிரார்த்தித்து வந்தான். பின்பு அவனது மனைவி கருவுற்றனள். அப்பொழுது, தேவர்கள் தனது வேண்டு

கோனுக்கு இணங்கினரென்று அவன் எண்ணி மகிழ்ந்து ஆண் மகவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நிறை மாதத்தில் அவனது மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இதைக் கேட்டதும் அவ் அரசனுக்கு வந்த கோபத்துக்கும் துயரத்துக்கும் எணக்கில்லை. அவன் தேவர்கள் தன்னை ஏமாற்றிவிட்டார்கள் என்று வெறி கொண்டு குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோய் மலையின்மீது ஓர் அடர்ந்த காட்டில் எறிந்துவிட்டான். பிறகு அதைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. குழந்தை சாகவேண்டுமென்பதே அவனது நோக்கம். ஆயினும் குழந்தையின் தலையில் வேறுவிதமாக எழுதியிருந்தது அவ்வேளையில் கரடியொன்று அங்குவந்தது. தரையில் கிடந்த குழந்தையைக் கண்டதும் அந்தக் கரடிக்குக் கூட அதைத் தின்க மனம் வரவில்லை. அது அக்குழந்தையை தன் குகைக்குத் தூக்கிச் சென்று அதற்குத் தன் பாலை ஊட்டிவளர்த்து வருகையில் வேட்டையாடிக் கரடியின் குகைக்குள் நுழைந்த சில வேடர்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டுத் தூக்கி எடுத்துக் கொண்டுபோய்த் தமது வீட்டில் வைத்து வளர்த்து வருதனர். அக்குழந்தையும் மற்றவேடப் பெண்களைப் போலவே வளர்ந்துவந்தது. அவளுக்குத் தோழர்கள் ஆண் பிள்ளைகளே. அவள் விளையாட்டுகள் அவர்கள் விளையாடும் முரட்டு விளையாட்டுகளே. ஆதலால் அவள் காற்றையும் மழையையும் சிறிதும் மதியாது, மிகவும்ஆண்மையுடன் அஸ்திர சஸ்திரவித்தைகள் யாவற்றிலும் தேர்ச்சி பெற்று, வேட்டையாடுவதில் நிகரற்றவளென்று பெயர் வாங்கினள். அவள் மங்கைப் பருவம் அடைந்த பின்னும் அவளது எண்ணம் முழுவதும் இவ்வகை முரட்டு விளையாட்டுகளிலேயே செலுத்தப்பட்டிருந்ததேயன்றிக் காதலைப் பற்றிய எண்ணம் சிறிதுமே

அவளுக்கு இல்லாது போயிற்று. அவளது வனப்பைக்கண்டு ஆசைகொண்டு தமது காதலை வெளியிட நெருங்கிய வாலி பரை அவள் சிறிதும் மதியாது அவமானப்படுத்தி அடித்து உதைத்துத் துரத்தினள்.

இத்தகைய புகழ் பெற்ற அடலான்டா, அங்கு ஒரு கையில் வில்லையும் மற்றொன்றில் கூரிய ஈட்டியையும் தோளில் அம்பறாத்தூணியையும் தாங்கிச் சிரித்த முகத் தோடும் அழகிய கண்களோடும் அம்பு போல் நிமிர்ந்த உடலோடும் எதிர் நிற்பதைக் கண்ணுற்ற மெலெயாஜெர் "இவளைப் பாரியையாய்ப் பெறும் வீரனே பாக்கியவான்" என்று எண்ணினன்.

சுற்றுப் புறத்து ஊர்களிலுள்ள வாலிபர் யாவரும் அங்கு கூடி எல்லாருமாக அந்த கோரப் பன்றியைத் தேடி ஆரவாரித்துச் சென்றனர். இவர்கள் எதிர்த்துவரும் கூக்கு ரலைக் கேட்ட பன்றியானது மலைகளினின்று எதிரொலி கிளம்பும்படி கம்பீரமாய் உறுமிக்கொண்டு அவர்களைக் நோக்கி ஒரே பாய்ச்சலாய் ஓடிவந்தது. அதைக் கண்டதும் வேட்டை நாய்கள் ஊளையிட்டுக் கொண்டு வெருண்டு ஓடின. வீரர்களிற் பலர் மனம் கலங்கித் திகைத்தனர். சிலர் தமது கைகளிலிருந்த ஈட்டிகளை அதன்மீது பரபரப்பாய் வீசி யெறிந்தனர். பன்றி தன் மீது பாய்ந்தால் உடனே ஓடுவதற் குத் தயாராய் நின்றுகொண்டு, ஒருகால் பின்னிழுக்க, எறிந்த சிலரின் ஈட்டிகளும், அச்சத்தால் நடு நடுங்கும் கைகளி னின்று சிலர் சிதறிய ஈட்டிகளும், பயத்தின் மேலீட்டால் கோரப் பன்றியை நேரே கூடப் பார்க்கத் துணியாத சிலர் வீசிய ஈட்டிகளும் அப்பன்றியின் மீது படவேயில்லை. அதன் கோபாவேசத்தைக் கண்டு திகைக்காது, தமது உயி ரைப் பற்றியே சிறிதும் நினையாது, அச்சம் என்பதையே

அறியாதிருந்த சில தீரர் துணிந்து, முன்னின்று, குறி வைத்து இலக்கா ந எறிந்த ஈட்டிகள் மட்டிலுமே அப்பன்றி யின் மீது பாய்ந்தன. அவற்றுள் அடலான்டாவின் ஈட்டியும் ஒன்று. காயமுற்ற பன்றி முன்னிலும் பதின் மடங்கு உக்கிரம் கொண்டு இங்கு மங்கும் பாய்ந்து வேட்டையாள் களையும் வேட்டை நாய்களையும் தாக்கிற்று. பயமில்லாது எதிர்த்து நிற்கும் சூரர் அதி வேகமாய்ப் பாய்ந்து வரும பன்றி கிட்ட வந்தவுடன் சரேலென்று ஒரு புறம் விலகிப் பன்றியின் தாக்குக்கு அகப்படாது ஒதுங்கினர். பயந்து நடு நடுங்கிக் கண்மூடித்தனமாய் ஓடமுயன்றோர் சிலர் ஓட வழி தெரியாது, வகை தெரியாது, திகைத்துப் பன்றியால் தாக்குண்டு விழுந்தனர். பன்றியானது கூட்டத்தில் இங்கு மங்கும் பாய்ந்து தனது காலின் குளம்புகளால் சிலரைக் மிதித்து நசுக்கியது; பற்களால் சிலரைக் கீறிக கிழித்தது; பருத்த உடலால் சிலரைத் தாக்கியது. வேட்டைக்குச்சென்ற வீரரைப் பன்றி வேட்டையாடியது. சிலர் மரங்களின் மீது ஏறினர், சிலர் ஓடோடி நேராக வீடு சென்றனர், சிலர் நாலா பக்கமும் பார்த்துக் கொண்டு ஓட வழிதெரியாது தயங்கினர். அசையும் புதரில் எல்லாம் பன்றி இருப்பதாக எண்ணி ஈட்டிகளை எறிந்த சில வீரர் பன்றிக்குப் பயந்து புதருள் ஒளித்த சில வீரர்களைக் காயப்படுத்தினர்.

இவ்வாறு யாவரும் அல்லோலகல்லோலப்படும் வேளை யில் சிறிதும் தயங்காது பன்றியைக் கண்ணுற்றபோதெல் லாம் அதன் மீது அம்பையோ ஈட்டியையோ எய்து வந்தாள் அடலான்டா. அவள் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த மெலெயாஜொ அவள் பன்றியை அடித்த ஒவ்வொரு தடவை யிலும் "நன்று, நன்று, நங்காய். இங்குள்ள ஆடவர் யாவரி னும் நீயே மேல்" என்று அவளைப் புகழ்ந்து வந்தான்.

கேவலம் ஒரு பெண்ணுக்குள்ள துணிவு தமக்கில்லை என்று பிறர் வசை மொழி கூறுவார்களே என்பதை எண்ணிய வீரர் வெட்கம் தூண்டத் துணிந்து ஏகோபித்துப் பன்றியைத் தாக்கினர் உடம்பெல்லாம் காயமுற்று, இரத்தம் பெருக, ஓடிய களைப்பாலும், பட்ட அடிகளாலும், சோர்வுற்றுக் கண்கள் கிறுகிறுக்கத் தள்ளித் தள்ளாடி ஓடி விழுந்து மறுபடியும் எழுந்து உறுமித் தாக்க எத்தனித்த பன்றியை அடலான்டா மறுபடியும் அடிக்கவே, அது பம்பரம் போல் சுழன்று விழுந்து மரணவஸ்தையிலிருந்தது. அப்பொழுது கூட அது உறுமிய உறுமல்கள் கேட்க பயங்கரமாயிருந்தன. ஆதலால் பன்றி நிஜமாகவே சாகுந்தறுவாயில் தான் வருகிறதோ அல்லது ஏமாற்றப்பார்க்கிறதோ என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. ஆகையால் ஒருவரும் துணிந்து பன்றியின் கிட்டப் போகாது ஒதுங்கி நின்றனர். அவ்வேளையில் மெலெயாஜெர தைரியமாய் நெருங்கிச் சென்று தனது கத்தியால் பன்றியின் கழுத்தில் ஒரே குத்தாகக் குத்தி அதைக் கொன்றனன். பன்றி பயங்கரமாய் ஊளையிட்டுக் கொண்டு மடிந்தது.

(தொடரும்)

ஞானமும், அருளும், ஊழும்.

Wisdom, Love & Destiny

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

"ஜனன மென்னும் கருங்கடலில் மூழ்கி, காமனென்கிற முதலை வாயிலகப்பட்டு, இருவினைகளென்ற அலைகளால் அடிக்கப்பட்டு, கட்காமக் குரோதாதிகளான சுழல்காற்றும் பலகாலும் வந்துதாக்க, குறைவுறாத ஆசையாகிய காட்டாறு, ஆகாயகங்கை பெருக் கெடுத்தாற்போல், மேன் மேலும் வந்துமோத, கைப்பரிசுக்காரர்போல், ஞானமாகிய மரக்கலத்தைக் கைவிட்டு மனங்கலங்கி அறிவழிந்து, 'எல்லாம் விதியின் வலிமை, ஊழின் கொடுமை, ஈசன் செயல்" எனக் கதறி மாயும் புல்லறிவாளரை நாம் பார்த்து வருகிறோம்.

பண்டை வினைப்பயன், ஊழ், விதி, பெருவலி எனப் பலவிதமாகக் கூறப்பட்டுவருவதின் மெய்க் குணங்குறிகள் யாவை? நம்மை வருத்துவதற்கான சக்தியை அது எவ்வாறு அடைகின்றது? கொடுமை துக்கம் தீமை வலி வருத்தம் ஏக்கம் முதலானவைகளுக்குக் காரணம் என்ன? இவைகளைப்பற்றிப் பூரணமாகவும், திடமாகவும், தெளிவாகவும் அறியாமையினாலன்றோ மேற் கூறியபடி அலற நேரிடுகின்றது.

இயற்கை உலகில் (World of Nature) ஆகர்ஷண சக்தியினால் (Gravitation) மேலெறியப்பட்ட வஸ்துக்கள் கீழ்வீழ்தல் போலும், உஷ்ண மிகுதியினால் நீர் ஆவியாதல்

போலும், தண்மை அதிகரிப்பினால் ஆவி நீராகவும், நீர் பனிக்கட்டியாகவும் உறைதல போலும், சன்மார்க்க உலகில் (Moral World) உஷ்ணத்தை யொத்த ஆசாபாசங்களும், தண்மையாகிய பராமுகமும் (Indifference), மிதமீறிய அகப்பற்றும் சுயநயமும் விருத்திக்கவே, அநேக இடையூறு இடுக்கண்கள் மேற்கிளம்பி, இவ்வுலகம் உலகாதிகளின் இயல்பையும் போக்கையும் பயன்களையும் அறிவித்து, நன்னெறியை ஓர்ந்து அறிந்து கைப்பற்றி யொழுகச் செய்யும் சக்தியே விதி என்பது. நாம் எண்ணிச் செய்யும் கர்மங்களின் சாராம்சமே ஊழ். ஊழுக்குக் கருமமும், கருமத்திற்குச் சிந்தனையும் காரணமாயின், விதியின் அதிகாரி நாமே என்பது தெளிவாகின்றது. சத்கருமங்கள் மிக்கமேலான எண்ணங்களின் வெளித்தோற்றங்களாவன மிக்க மேலான எண்ணங்கள் தீர்ந்து தெளிந்த மனத்தினின்றும் கனிந்த நெஞ்சினின்றுமே உண்டாகிப் பெருகுவன. தூயமனத்திற்கும் இனிய இதயத்திற்கும் அடிப்படையாவன அகம்புற வாராய்ச்சியும், நல்லோர் கூட்டுறவும், நற்கல்வியுமே யாம்.

சுகதுக்கங்கள் ஒருவனுடைய மனோ வளர்ச்சியைப் பொருத்திருக்கின்றன. ஜீவான்மாவின் லக்ஷியம் (Ideal) அல்லது முடிவிடம் (Goal) இன்பமாகும் (Bliss). ஊக்கமும், தைரியமும், உத்கிருஷ்டமான எண்ணங்களுமே இன்பமாகிய மாளிகையில் அமர்த்துவன. மெய்யறிவு உதித்துப் பெருகப் பெருக இன்பம் உண்டாகி வளரும். மனத்தூய்மையும், சீர்மையும் பெருமையும் மேலோங்கி வளரவே, ஞானமும் அருளும் உதயமாகித் தம் சக்தியை நாலாபக்கங்களிலும பரப்புகின்றன.

வாழ்க்கையாகிய நதி சிருப்பமாகிய நிலத்தின்மீது ஓடுகின்றது. அதாவது, நம்முடைய வாழ்க்கையின் பிரகாச

மும் மழுக்கமும் நம் விருப்பத்தை ஒத்திருக்கின்றன. ஒவ்வொருவனுடைய சரீர அமைப்பு மனப்போக்குகளுக்குத் தக்கவாறே இவ்வுலகாதிகள் அவனைச் சார்கின்றன. ஊகமும் ஊழ், அல்லது நாம் நம்முடைய முற்பிறப்புக்களிலிழைத்த செயற்களின் பலனும் கூடிக்கலந்து நமது வாணாட்களைச் செலுத்துகின்றன. ஞானமும் அருளு மில்லாதவர்கள் விதியால் ஜயித்து அடக்கப்படுவார்கள்.

நூற்றுக்கணக்கான புத்தகங்களைப் படித்து வாதாடுபவர்கள் கலைஞர்களாகாத வாறுபோல், இப்பிரபஞ்சம் பிரபஞ்சாதிகளின் குணஇசயங்களையும் பிரயோஜனத்தையும் அறிந்தவர்கள் மாத்திரம் தத்வக்ஞர்களல்ல. ஆனால் தாம் அறிந்தவைகளைப் பிறர்க்கும் அறிவித்து, பாமரர்களையும் பண்பிலார்களையும் தெளிவித்து உயர்த்தும், ஞானம் அருள் இன்பமாகியவைகளைப் பரப்புபவரே மெய்ஞ்ஞானிகள். இவர்கள் தோன்றி இருந்து வருமிடங்களில், விதி வலிமையற்று, பலதிறப்பட்ட இடையூறு இடுக்கண்கள் தாமே அழிந்து போம். மடியும் அஞ்ஞானமும் நம்மிடமிருந்து நீங்கிய நாளிற்றான் மனவமைதியும் உற்சாகமும் உண்டாகிவளரும். போகமாகிய ரதத்திலேறி, பாசங்களான குதிரைகளை நியமம் (Duty) என்ற கடிவாளத்தினால் இறுக்கிக் கட்டாது நாம் விடுப்பின், நரகவழியை யடைந்து அதிவேகமாய் முன்னோடி வருத்தமாகிய படுகுழியில் வீழ்ந்து அழுந்திவிடுவோமென அறிஞர்கள் பன்முறை கூறிவருகின்றார்கள். மெய்யறிவு, இதன் ஆக்ஞையை எள்ளளவேனும் விடாது பற்றி யொழுகல், அல்லது மனோதிடம் விசுவாசம் அருள் முதலானவைகளை நிரம்பப் பெற்றவர்களுக்கு வலி வருத்தமாகியவைகள் துரும்புபோல்வன.

வாய்மையே உருவெடுத்தாற்போன்ற ஹரிச்சந்திரனுக்கு ஊழ் என்பது விசுவாமித்திரன் ரூபமாகத்தோன்றி அவனைப் பற்பல கஷ்ட நஷ்டங்களுக்குட்படுத்தி வாட்டி வதக்கிய போதிலும், மெய்யின் மீதுள்ள பக்தியினாலும் இதினின் றுண்டாகும் சக்தியினாலுமே அவன் அவைகளைப் பொறுத் ததும், தனக்குச் சாதகக் கருவிகளாக மாற்றியும் இறுதியில் வெற்றியடைந்ததை நாம் அறிவோம். ராவணனிடத்தில் ஞானம் நிரம்ப இருந்தும் அதற்குக் கீழ்படிந்து ஒழுகுதற் கான மனவுறுதியும் அருளும் இல்லாமையினால், விதியானது ஜானகிரூபத்துடன் தோன்றவே, மன்மத பாணத்தினால் அடி பட்டு, அதை எதிர்த்து அடக்குவதற்கான சக்தியற்று அழிந் தனன் இவ்விருவரையும் ஊழ் என்பது தாக்கிவருத்தியபோ திலும் ஒருவன் தன்னுடைய சகிக்காத சுகுணகடத்தைய ளால் அதை வென்று அடக்கினன்; இச்சக்தியை உடைத்தா யிராத மற்றவனோ அவ்வூழினால் மாய்ந்து போயினன். ஞானமும் அருளும பூரித்துவிளங்கிய குசேலமுனிவரை விதியானது வறுமை வாயிலாகத் தோன்றித் துன்புறுத்திய பொழுது, அவர் அதற்கிடங்கொடாது தன் தெய்விகச் சக்தியினால் தன்னுடைய பெருங்குடும்பத்தைத் தாங்கி வந்தபோதிலும், அவ்விதி மீண்டும் இவருடைய மனைவி வாயிற்புகுந்து இவருடன் வார்த்தையாடச் செய்து மயக் கவே, பெரும் பொருட்செல்வம் கொண்டு வரச் சம்மதித்துப் புறப்பட்டு, கொதிக்கும் பாலைவனங்களையும் நாகபக்ஷிணிகளும் கூரியமுட்களும் கற்களும் உள்ள காடுகளையும், அபாய கரமான ஆறுகளையும், உயர்ந்த பர்வதங்களையும் கடந்து, இன்னுமிவைபோன்ற ஏனைய இடர்களுக்கிலக்காகிக் கடைசி யில் வேண்டிய செல்வம் கிடைத்தவுடன் இவருடைய மனம் அமைவுற்று இனித்திருந்ததோ? இல்லை! முனிவரை அவரு

டைய மூடமனையாளின் வேண்டுகோளுக் கிணங்கச் செய்து தன் வசப்படுத்தி அலட்புறச்செய்ய விதியானது எண்ணிப் பிரயத்தனிக்கையில், குசேலருடைய பூர்வ ஞானமும் அருளும் முன்வந்து இவ்விதியை வென்று நற்கதியடையும்படி அவர்க்கு உதவின.

நம்மைக் கலக்கி வருத்துவதற்கான சக்தியை ஊழ் என்பது நம்முடைய அவிவேகம் அஞ்ஞானங்களினின்றே அடைகின்றது. நீதி நியாயம் அநீதி அநியாயம் மேன்மை தாழ்மை இன்பம் துன்பம் ஆகிய பேதங்களையும், மேலும் அவைகளை உண்டு பண்ணுவதற்கான வல்லமையையும் உடைத்தாயிராமல் ஒடுங்கிப் பதுங்கிக் கிடந்த ஊழ் நம்முடைய குணவொழுக்கங்களினின்று தைரியமும் பலமும் பெற்று, தீச்செயற்களாலுல், துர்தேவதைபோல், நம்மையே சார்ந்து தண்டிக்கின்றது ; நற்செயற்களாயின், தக்க நற்பலனை யளிக்கின்றது.

ஞானத்திற்கு மார்க்கமாவது புத்தி. (Reason) புத்தியானது ஊழைத் தன்னிடம் நெருங்காது பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றது. ஆனால், ஞானமோ (Wisdom) அவ்வூழை எதிர்த்துத் தன் சிறப்பைப் பிரஸ்தாபிப்பதற்கான துணைக் கருவியாக மாற்றுகின்றது. சீதோஷ்ணம் சுக துக்கம் உயர்வு தாழ்வு பிறப்பு இறப்பு வளர்ச்சி தேய்வு முதலானவைகளால் புத்தி கலக்க மடைகின்றது. ஆனால், ஞானமோ அவைகளைச் சமத்வமாய்ப் பாவித்துத் தன் தெய்விகச் சக்தியினால் அவைகளின் ஒற்றுமையையும் நன்மையையும் பலிதங்களில் தெரிவிக்கின்றது. ஆனது பற்றியே கன்ப்யூஷஸ், ஸாகரெடிஸ், ஸோராஸ்டர், ஏசுரக்ஷகர் இன்னுமிவர்கள் போன்ற இதர மகாத்மாக்கள் ஓர் பக்கத்தில் சிறகிய அறிவும் குறுகிய தொழிலுமுடைய மானுடப் பதர்

களால் கணக்கற்ற துன்பங்கள் குரூரச் செயற்கள் கடுந் தண்டனைகளுக்குட்படுத்தி வாதிக்கப்பட்டபோதிலும், மறுபக்கத்தில் விதி எனப்படுவது பசி வறுமை பிணி முதலான கோரரூபங்களுடன் தோன்றி அச்சுசீலர்களுக்குப் பல்வேறு கஷ்டங்களை உண்டுபண்ணின போதிலும், தம் ஞான வனப்பத்தினாலும் அருட்பெருக்கத்தினாலுமே அத்தீமைகளை யடக்கி இன்பசாகரத்தை யடைந்து ஆனந்தித்தனர்.

அருளுக்கு ஆதாரம் ஞானம்; ஞானத்திற்கு வழி புத்தி. எனினும், ஞானமும் அருளும் (Love) உதித்து ஓங்கி வளர்ந்து வியாபித்து ஆன்மாவைச் சுயம்பிரகாசத்துடன் விளங்கச் செய்து வருகையில், இதற்குத் தடையாக புத்தி நிற்கின்றது. முன்னிரண்டையும் ஜீவன் அடையா வண்ணம் பின்னது எதிர்த்துப் போர்புரிகையிற்றான் அஜ் ஜீவனின் கர்மசாரமான விதி அஜ்ஜீவனைப் பரீக்ஷிக்க முன் வருகின்றது. இச்சமயத்தில் புத்தியின் பகட்டுக்களையும் விதியின் படாடோபங்களையும் ஜீவன் பார்த்து மனங்கலங்காது மெய்யின்மீதும் ஜகத்பிதாவின்மீதும் தன் சிந்தையைப் பூரணமாகச் செலுத்துமாயின், ஞானமும் அருளும் பெருகி அதை மேற்செலுத்தும்.

யான் எனது என்ற அகப்புறப் பற்றுக்களை அறவே ஒழித்து, வறுமை செல்வம் முதலான பேதங்களைப் புறத்தே போக்கி, கோபம் தாபம் என்பவைகளை யடக்கி, வஞ்சகம் பொறாமைகளை வென்று, பாசங்களை அறுத்து, பேதமையைத் துரத்தி, லாபம் கீர்த்திகளின் மீதுண்டாகும் ஆசையை அகற்றி வரவே, ஞானம் அருளாகிய மலர்கள் அலரும் நியமித்த கருமங்களை நியமித்தவாறே நிஷ்காமியமாகச் செய்து முடிப்பதுதான் ஞானம். ஞானமே என்றுமுள்ளதாய், பாசத்தை அறுத்தழிப்பதாய், பிறப்பு இறப்பு

அற்றதாய், மனோ வாக்குக்களுக்கெட்டாததாய், மோன பரா நந்த முத்திக் கிறையாய் எங்கும் நிறைந்ததாய், எல்லா மறிந்ததாய் பரிபூரணானந்தப் பிழைப்பாயுள்ள பரமபதியைத் தரிசிக்கச்செய்யும். மேலும், இவ்வுலக வாழ்க்கைக்கான சாதனங்களையும் அளித்து இனித்திருக்கச் செய்யும், இத் தகைய சிறப்புவாயப்பெற்ற ஞானமும் அருளும் நிரம்பிய சத்புருடர்களிடமும் இவர்களிருக்கு மிடங்களிலும் விதி என்பது தலை யெடுக்குமோ? சூரியன் முன் பனியைப் போல், இச்சத்புருடர்கள் உதித்த மாத்திரத்தில் விதிதானே பறந்து விடும். காலத்தச்சனை வென்ற மார்க்கண்டேயன், சாவித்திரி சத்தியவான், விதி என்பது சூதாட்டத்தின் வாயி லாகத்தோன்றவே மதிமயங்கி ஆழ்த்துயரக் கடலுள்ள ழுந்தி அவதிப்பட்ட நளன், முதலானவர்களின் சரிதங்களே மேலெழுதிய வற்றிற்குத் தக்க சான்று பகர்வன. நளன், துரியோதனைகியா ஸ்தானத்தில் ஓர் மெய்ஞ் ஞானி இருந்தி ருக்கட்டும். அவர்களுக்குண்டான துன்பமும் அழிவும் சம்பவித்திரா.

ஒவ்வொரு ஜீவான்மாவின் ஆயுட் காலத்திலும், அதின் சத்வத்தை வெளிப்படுத்தும் பொருட்டு, அவ்வான்மா தன் முற்பிறப்புக்களிலிழைத்த நன்மை திமைகள் திரண்டு ஆக ஊழ் இழவூழாகத்தோன்றி அதை ஒரு முறையாவது எதிர் க்கின்றன.

வறுமைக்குக் காரணம் மடி; மடியின் தாய் பேதைமை; சுகபோக சிந்தனையே அதின் தந்தையாகும். சர்வ அங்கங் களையும் திட தேகத்தையும் குறைவறப் பெற்றிருந்தும் எத்தகைய ஊழையுந் தழுவாது வரனுளை வீணாக மாற்றிக் கழித்து அலப்புறும் புன்மாக்களை நாடு, நகரம், வீதிகள் தோறும் எல்லாக் காலங்களிலும் நாம் பார்த்து

வருகிறோம் இதற்குக் காரணம் என்ன? விதியின் லீலையோ? அல்லது, ஜகதீசனின் அவமதிப்போ! அறிவின்மையே காரணம். இம்மை மறுமைப் போகங்களைச் சம்பாதித்து அநுபவித்தற்கான தேகாரோக்கியத்தையும் வேறு சாதனங்களையும் கடவுள் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அளித்திருக்கின்றார். நன்மையைப் பெருநன்மையாகவும், தீமையை நன்மையாகவும் உயர்த்தித் திருத்தி உய்வதற்கான சக்தி நம்மிடமிருக்கின்றது. எடுத்தாளாத ஆயுதம் துருப்பிடிப்பது போல் நற்கல்வியினாலும சீரிய சகவாசத்தினாலும் அச்சக்தியின் மகத்வத்தை அறிநது சரியான காலத்தில் நேரான வழியில் நாம் உபயோகிக்காததினால் மூடம், மமதை, போகப்பிரியம், சோம்பல் முதலியவைகளால் நம்மிடமுள்ள தெய்வீக சக்தி மூடப்பட்டு உபயோகமற்ற தாகிவிடுகின்றது. ஆனால் அச்சக்தி ஜகதீசனின் அம்சமாதலின், தெய்வீகக் குணங்களான ஞானம், இனிமை, அருள், நீதியாகியவைகளை அச்சக்தியும் சம்பூரணமாகப் பெற்றிருப்பதை அறிநது, எத்தகைய சலனமும் சலிப்பு மில்லாது அவைகளையே பின்பற்றித் தன் செய்கைகள் வழியாக அவைகளின் மேன்மையை வெளிப்படுத்த முயறசிப்பவன், நாள் செல்லச் செல்ல அவ்வுத்தம குணாதிசயங்களைச் தானும் அடைந்து, சுகஜீவனாய், தனக்கும் தன்னினத்தாாககும் இன்பம் பயக்கக் கூடியவனாய், சுகசரீரமும் சகல ஐசுவரியங்களும் உடையவனாய், பாமரர்க்குக் குருவாய், எளியர்க்கு அடைக்கல ஸ்தானமாய், விதியின் யஜமானனாய், இவ்வுலகினரிடையில் ஓர் ஒப்புயர் வில்லாத அணிகலமாய்ப் பிரகாசிப்பா னென்ற விஷயம், மகம்மத், ஔவை, தாகூர் அவிசிரி, ஜோன் ஆப் ஆர்க் நின்றைக்காளத்தி வள்ளல், துக்காராம், நநதன், ராமகிருஷ்ண பரமஹம்ஸா முதலாயினோர்களின் ஜீவசரிதங்களைப் படிப்போமா

யின், மலை மேலிட்ட தீபம் போல் விளங்கும், இத்தகையர்க்கும் நானாவித இடையூறு, இடுக்கண்கள் நேரிடுவதினின்று நாம் அறிய வேண்டுவது யாதெனில், ஞானத்தின் சக்தியும் அருளின் சிறப்பும், விதியின் அசக்தமுமேயாம்.

ஆன்மாவின் விளக்கத்திற்கும் சிறப்பிற்கும் தேகம் இன்றியமையாதது ; தத்வஞானப பயிற்சிக்கு மனவமைதியும் உறுதியும் அவசியமாவன. இவைகளுக்கு ஆழ்ந்து பரந்த கல்வியும். ஆராய்ந்து நிதானித்துப் பார்த்தறியுங் குணமும் அஸ்திபாரமாவன. முக்திக்கு ஆதாரமாவது ஆத்மஞானம். ஆத்மஞானத்திற்கு விளை நிலமாகவுள்ளது விவேக முதிர்ச்சி. விதைக்கு நிலம் போல்வது ஆன்மாவுக்குச் சரீரம். சேற்றிலும் பாறைகளிலும் விதை முளைத்து வளராதது போல், நொய்ந்த அல்லது பிணியுற்ற தேகத்தினின்று உள்ளக்கிளர்ச்சியும், கல்வியாசையும், மனோதிடமும் உண்டாகா ; படிப்பவை மனத்தில் தங்கியிரா ; ஆதலின், விவேக முதிர்ச்சியில்லை ; இஃதில்லாத பொழுது, தத்வஞானமும் அருளும் உதித்துப் பெருகுவதில்லை ; இவ்விரண்டு மில்லையாயின், ஆன்மா சுயச்சிறப்புடனும் சக்தியுடனும் விளங்காது ; இவ்வூழின் கொடிய கையிலகப்பட்டுத் துடிக்க வேண்டிவரும். ஆதலால், மாந்தரனை வரும் முதலில் தேடிப் பெறவேண்டிய செல்வம் யாதெனில், தேகாரோக்கியமேயாம். இதற்குச் சுகாதார நூற்பயிற்சி அத்தியாவசியமானது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளுடைய இளமை முதற் கொண்டே வண்டி, பானம், உடுப்பு, பழக்க வழக்கங்கள் முதலான விஷயங்களில் பிறர் புகழத்தக்கதும், எத்தகையர் உள்ளத்திலும் வெறுப்பையும் துவேஷத்தையும் விளைவிக்காததும், இன்பமே பயப்பதும், நோய்க்கிடங் கொடாததுமான வழிகளை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். “நோயற்ற

வாழ்வே குறைவற்ற செல்வம்." "விதியை மதியால் வெல்லலாம்." "ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப் புடைத்து." "ஊழையு முப்பக்கங் காண்பருலைவின்றித் தாழா துஞற்று பவர்." இம்மொழிகளின் பொருளை அநுபவத்தினின்று அறிய முயற்சி செய்யவேண்டுமே யல்லாது, "சகலமும் விதியின் செயல்; விதியை எதிர்த்து அடக்குபவர் ஒருவருமில்லை; தேவர்கள் கூட விதிப்பேயினாற் பீடிக்கப்பட்டு வருந்தினார்களென்றால், எவ்விதத்திலும் அவர்களுக்குக் கீழான மானுடராசி மாத்திரம் எவ்வாறு அதினின்று தப்பக்கூடும்?" எனக் கூறி, சுகித்திருக்கக் கூடிய ஜீவனை வெகு துன்பத்திற்குள்ளாகிச் சாகாப் பிணம்போல் திரிவதில் உபயோகமொன்றுமில்லை.

கிருக ஓரை

Planetary Hours

ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி, B. A., B. L., எழுதியது

ஓரை (ஹோரா —Hour) என்பது ஒரு தினத்தை ஸூரிய உதய முதல் மறு ஸூரிய உதயம் வரையில் உள்ள காலத்தை) 24 பாகமாகப்பிரித்துக் கிடைக்கும் ஒரு பகுதி. அவ்விதம் ஏழு தினங்கள் கொண்டது ஒருவாரம் (week) எனப்படும்.

வாரம் என்ற கால அளவு வெகு காலத்திற்கு முன் ஏற்பட்டது என்று தோன்றவில்லை. புராதன ராஜ்யங்களாகிய சீன தேசம் (China) இந்தியதேசம் (India) ஆகிய இரண்டிலும் அறுபது வருஷங்களடங்கிய ஒரு அளவும் அவ்வருஷத்தின் உட்பிரிவாய் அமாவாசை தொடங்கி அறுபது நாட்கள் அடங்கிய சிற்றளவும் தான் இருந்ததாக ஏற்படுகிறது, பிற்பாடு ஒரு அமாவாசை முதல் மற்றொரு அமாவாசை வரையிலுள்ள முப்பது திதிகள் (சந்திர தினங்கள்) தான் அளவாகப் கொள்ளப்பட்டன. சூரிய தினங்களை (சூரிய உதய முதல் மறுஉதயம் வரையுள்ள நாட்களை) ஆதாரமாக எங்கும் கொள்ளப்படவில்லை. அச்சூரிய தினங்கள் ஏழடங்கிய வாரங்கள் எடுத்துக் கூறப்படவில்லை என்பது சொல்லாமலே விளங்கும் ராஜாங்க விஷயங்களுக்காக பிற்காலத்தில் ஏற்பட்டதாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆராய்ச்சி செய்துள்ளவர்கள் ஐரோப்பா தேசத்தில் சால்டியர் (Chaldeans) களிடமிருந்து ஹீப்ரு (Hebrews)

ர்களுக்கு கிடைத்து அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கும் பரவியது இஞ்ஞானம் என்கிறனர். சால்டியர்கள் சோதிடத்தில் மிகவும் தேர்ந்தவர்கள் என்று ஏற்படுகிறது. அவர்களுடைய வான ஆராய்ச்சியும் சோதிடமும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. அச்சால்டியர் களிடமிருந்து தான் நமது இந்தியாவுக்கு வாரம் ஓரை முதலிய கால அளவுகளும் அவைகளின் சோதிட அர்த்தங்களும் கிடைத்தன என்று தோன்றுகின்றது.

இருபத்திநான்கு ஓரைகள்கொண்ட நாட்கள் ஏழு அடங்கியது ஒரு வாரம் என்று முதலில் சொல்லப்பட்டது. அவ்வேழுநாட்களுக்கும் பெயர் (name) முறையே ஏழுகிரகங்களின் (Planetary) பெயர்கள் கொண்டிடப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை (Sunday) திங்கட்கிழமை (Moonday) செவ்வாய்க்கிழமை (Marsday i.e. Tuesday), புதன்கிழமை (Mercury day i.e. Wednesday), வியாழக்கிழமை (Zeus or Jupiter day i.e. Thursday), வெள்ளிக்கிழமை (Venusday i.e. Friday), சனிக்கிழமை (Saturnday). ஏன் முதல் நாள் சூரியன் பேரிடப்பட்டது என்பதற்கு காரணம் ஒன்றும்ஏற்படவில்லை. மற்றெல்லா கிரகங்களுக்கும் வெப்பமும் சாந்தியும் அளிப்பதால் மேன்மைபெற்றதால் முதல் வைககப்பட்டது எனலாம். பூமி முதலிய எல்லா கிரகங்களும் தன்னைச் சுற்றுவதாலும் முதன்மை பெற்றது சூரியன். பூமண்டல ஸ்ருஷ்டியில் உருவற்ற வெப்ப கோளம் ஒன்று சுழன்று சுழன்று வரும்போது அதனின்றும் வெளியாய் சிறு துண்டுகள் ஆங்காங்கு சேர்ந்து குளிர்ந்து ஒவ்வொரு கிரகங்களாயின வென்றும் அவ்விதம் போனதில் மிகுந்து நடுவில் குளிராது மிக வெப்பத்துடன் இருக்கும் ஆதியான கோளம் சூரியனாகையால் அதை முதலில் வைத்து

முதல் வாரம்(ஆதிவாரம்) என்பதற்கு அது பதிலாக வைக்கப் பட்டது என்றும் சொல்லலாம்). அடுத்தபடி இரவில் நமக்கு ஒளி வீசி புராதன காலத்தில் திதி (தினம்) அளவுக்கு காரணமாக இருந்தமையால் சந்திரனை எடுத்து திங்கட்க் கிழமைக்கு அது பதிலாக எடுக்கப்பட்டது எனலும் ஆகும். மூன்றாவது நாள் நாமிருக்கும் பூமியின் பிள்ளை என்று சோதிடத்தில் சொல்லப்படும் செவ்வாய் ஆதினத் துட்படுத் தப்பட்டதோ என்று நினைக்கலாம். இம்மாதிரியே மற்ற கிரகங்களுக்கு காரணம் சொல்லமுடியவில்லை.

24 ஹோரைகள் சேர்ந்தது ஒரு நாள் என்று எப்பொழுது எத்தேயத்தில் பகுக்கப்பட்டது என்பதும் ஏற்படவில்லை. ஆயினும் முற்கூறிய சால்டியர்கள் (Chaldeans) தான் இப்பகுத்தலுக்கும் காரணம் என்று தோன்றுகிறது. அவர்கள் ஏழுகிரகங்களையும் அவைகளின் கமனம் அல்லது கதி அதாவது சுற்றுங்கால ப்ரமாணத்தைக் கொண்டு ஒன் றின்கீழ் ஒன்றாக முறையே சனி, குரு (வியாழம்) செவ்வாய், சூரியன், சுக்ரன் (வெள்ளி), புதன், சந்திரன் (திங்கள்)என்று வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஹோரைக்கும் ஒவ்வொரு கிரகத்தை அதிபதியாக வைத்து மேற் கூறிய முறையே எண்ணி வருவதில் முதன் முதல் ஞாயிற்றுக்கிழமை சூரிய உதயம் முதல் ஹோரைக்கு சூரியன் என்று எடுத்துக் கொண்டு, அடுத்தது சுக்ரன், அடுத்தது புதன் என்று இம் முறையே எண்ணி வருகையில் மும்முறை ஏழுகிரகங்களை யும் கணக்கிட எஞ்சிய மூன்று ஹோரைகளுக்கு முறையே சூரியன், சுக்ரன், புதன் ஆக, மறு நாள் முதல் ஹோரைக்கு சந்திரன் அதிபதியாகிறது, ஆகையால திங்கட்கிழமை முதல் ஹோரை சந்திரனுடைய தென்பது பொருத்தம். அவ் விதமே அன்று 21 ஹோரைகள் முடிந்து மிகுந்த மூன்று

ஹோரைகளுக்கு சந்திரன், சனி, குரு, ஆக, மறுநாள் முதல் ஹோரைக்கு செவ்வாய் ஆக அத்தினம் செவ்வாய்க்கிழமை என்று குறிக்க செவ்வாய்க்கிழமை எனப்பட்டது. இவ் விதமே சனிக்கிழமை இருபத்திரண்டாவது ஹோரை துடங்கி சனி, குரு, செவ்வாய் ஆக மறுநாள் முதல் ஹோரை சூரியனுடையதாயிற்று. ஆக அது ஞாயிற்றுக் கிழமை என்றதோடு பொருந்திற்று.

ஒவ்வொரு நாளிலும் சூரிய உதயம் முதல் மறு நாள் சூரிய உதயம் வரையில் உள்ள காலம் 24 ஹோரைகளாக பகுக்கப்பட்டது என்று மேலே சொல்லியிருக்கிறது. ஆயி னும் உண்மையில் ஒரு தினத்தை நான்கு பாகங்களாக பிரி த்து சூரிய உதயம் முதல் சூரிய உச்சம் நடுப்பகல் வரையில் உள்ளபாகத்துக்கு ஆறு ஹோரைகளையும், சூரிய உச்சம் முதல் சூரிய அஸ்தம் வரையிலுள்ள பாகத்திற்கு ஆறு ஹோ ரைகளையும் சூரிய அஸ்தமான முதல் நடு ராத்திரி வரையி லுள்ளபாகத்திற்கு ஆறு ஹோரைகளும் மறு நாள் சூரிய உத யம் வரையிலுள்ள பாகத்திற்கு ஆறு ஹோரைகளையும் பிரித் துக்கொள்ளவேண்டும். இதற்குக்காரணம் என்னவென்றால் சூரிய உதயமும் அஸ்தமனமும் தினந்தோறும் இடந்தோறும் வேறுபடுகின்றது.

இந்த ஹோரைகளை அறிவதால் உள்ள பிரயோஜனம் என்னவென்று சற்று விசாரிப்போம். நாம் தினந்தோறும் பல காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது; பலரோடு பழக வேண்டியிருக்கிறது; அநேக விஷயங்களைப் பற்றி எழுத வேண்டிருக்கிறது; இவை ஒவ்வொன்றிற்கும் முகூர்த்த சாஸ்திரப்படி நல்ல வேளை லக்கினம் முதலியன பார்ப்ப தென்பது அஸாத்தியம். ஒருமணி நேரம் முன் பின்னாக ஒரு காரியத்தைச் செய்வதும் சில வேளைகளில் கஷ்டமாயிருக்கும்

ஆகையால் இந்த ஹோரைகளைக் கொண்டு எந்த ஹோரையில் எக்காரியம் செய்யலாம் என்று தீர்மானிக்கலாம் என்பது தான் இக்கிரக ஹோரை சாஸ்த்திரத்தின் துணிபு. அக் கொள்கைப்படி ஒவ்வொரு கிரகத்தின் கீழ்உள்ள காரியங்கள் முதலியன கீழ் கொடுக்கப்படுகின்றன:—

சூரியன்:—தந்தை அரசன் அல்லது எஜமானன், தங்கம், தேக ஆரோக்கியம், ஆயுள் ராஜாங்க அல்லாது உத்தியோக விஷயங்கள், ஜீவனத்தில் ஏற்றம் கௌரவம், முதலியவற்றைகுறிக்கும்.

சந்திரன்:—தாய், பொதுக்கூட்டம், முனிஸிபாலிடி (Municipality or local bodies) வெள்ளி, வெண்மையான வஸ்துக்கள் துணிகள் மாற்றல்கள், ஸ்திரீகள் முதலியன வற்றைக் குறிக்கும்.

செவ்வாய்:—யௌவனர்கள், நெருப்பு, இரும்பு, எஃகு, கோபம், சண்டை, குத்து, காயங்கள், அடிகள், தீப்படல், இரத்தம், இறத்தல், சிவந்த வஸ்துக்கள், ஜுரங்கள், எத்னங்கள், ரணவயித்தியம், ரணவீரர் முதலியன வற்றைக்குறிக்கும்.

புதன்:—சிறு பிள்ளைகள், படிப்பவர்கள், காகிதங்கள், பத்திரிகைகள், சிறு தூரப் பிரயாணங்கள், வியாபாரம், பத்திரம் எழுதல், உணவு, உடுப்பு, தட்டு முட்டுசாமான்கள், உத்தியோகம், வர்த்தகம், வார்த்தை பிரஸங்கம் முதலியவற்றைக் குறிக்கும்.

குரு:—தர்ம விஷயங்கள், லாபம், வளர்ச்சி, வக்கீல்கள், நியாயாதிபதிகள், மதம், தத்வம், ஆடம்பரமான விஷயங்கள், பணம், ஜயம், எதிர்கிலேக் கோட்பாடுகள் முதலியவற்றைக் குறிக்கும்.

சுக்ரன்:—யுவதிகள், பிறப்பு, மணம், ஸ்நேகசந்தோஷக் கூட்டங்கள், ஆடல் பாடல் இடங்கள், ஸங்கீதம், சித்திரம் வரைதல், களைப்பாறுதல், சந்தோஷம் முதலியவைவற்றைக் குறிக்கும்.

சனி:—வறுமை, இருள், தனிமை, குளிர்ச்சி, வெறுப்பு, பொறுமை, கனத்தசாமான்கள், கடு நிலைமை, சோகம், ஸந்தேகநிலை, கீழ்விழுதல், கஷ்டம், வியாதி, கிழவர், பண்டை காலத்து விஷயங்கள் கூட்டங்கள், ஞாபகம் கறுத்தவர்ணமுள்ளவை, அழுதல், உயிர்நீத்தல் முதலியன வற்றைக்குறிக்கும்.

சுருக்கமாக ஒவ்வொரு கிரகத்தினுடைய விஷயம் பின் வருமாறு இருக்கும் சூரியன்—கௌரவம்; சந்திரன்—மாறுதல்கள்; செவ்வாய்—சண்டை; புதன்—வேலை; குரு—லாபம்; சுக்கிரன்—ஸுகம்; சனி—கஷ்டம்.

மேற் கூறியதிலிருந்து சூரிய ஹோரையில் உத்தியோக விஷயமாயும், சுக்ர ஹோரையில் மணவிஷயமாயும், புத ஹோரையில் வித்தியா விஷயமாயும், குரு ஹோரையில் நியாய விஷயமாயும் முயற்சி செய்யலாம் என்று விளங்கும். செவ்வாய் சனி ஹோரைகளில் பிரயாணம்செய்ய ஆரம்பித்தால் ரணகப்படலாம் அல்லது உடலுக்கே கெடுதல் நேரிடினும் நேரும் என்பதும் தெரியவரும். ஊகித்துப் பார்த்து மேற் கூறிய வற்றையும் வைத்துக்கொண்டு, இன்னும் அநேக விதமாய் இதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

புராதன நியாயஸ்தலங்களும் அவைகளின் நடவடிக்கைகளும்

Ancient Law Courts and their Procedure

ஸ்ரீமான் S. V. கோபால கிருஷ்ணன், M.A.,M.L., எழுதியது

நமது பத்திரிகையில் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாரவர்கள், தற்காலத்து நியாயஸ்தலங்களையும் அவைகளின் நடவடிக்கைகளையும் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது ஹிந்து ராஜ்ஜியங்கள் வளமையுடன் இருந்த காலங்களிலும் இத்தகைய நியாயஸ்தலங்கள் பல இருந்தன. அவைகளைப் பற்றி இப்பொழுது சொல்லுகிறேன்.

இந்த விஷயத்தைப் பற்றிய விவரங்கள் வடமொழியிலிருக்கும் "ஸ்ம்ருதி" நூல்களிற் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமாய் "மநுஸ்ம்ருதி 'நாரதஸ்ம்ருதி' 'யாஜ்ஞுவல்க்யஸ்ம்ருதி என்ற மூன்றிலும்" நியாயஸ்தலங்களுடைய வருணனை மிகுதியாய்க் காணப்படுகிறது.

ஸ்ம்ருதிகளிற் சொல்லியிருப்பதை ஆராய்ச்சி செய்யுமுன் "ஸ்ம்ருதி" என்றாலென்னவென்பதை அறிந்து கொள்வது தகுதியாகும். வடமொழியார் தர்மம் என்றும் தென்மொழியார் "அறம்" என்றும் சொல்லுவதொன்றை அறிவதற்கு நான்கு வழிகள் உண்டு என்பது வடமொழி நூல்களின் கொள்கை. அவைகளாவன, 'வேதம்', 'ஸ்ம்ருதி,' நல்லோரின் ஒழுக்கம், நன்கறிந்து மேம்பட்டோரின் மனத்

தோற்றம். இவைகளுள் வேதம் மானிடரால் செய்யப்படாத தென்பதும், அது பரம்பொருளின் வாக்கென்பதும், கொள்கை. அவ்வாக்கை ஆதிக்கால ரிஷிகள் கேட்டு அவ்வப்போது எழுதியுள்ளார் அதனாற்றான் வேதத்திற்கு 'சுருதி' யல்லது 'கேட்கப்பட்டது' என்று வடமொழியில் ஒரு பெயரும் உண்டு.

ஸ்ம்ருதி நூல்கள், ரிஷிகளால் கூறப்பட்டவை. அவைகள் வேதங்களுக்குப் பிற்காலம் வந்தன. வேத வாக்கையே அனுசரித்து எழுதப்பட்டவை. வேதத்தில் சொல்லப்படாத விஷயங்களேயும், அங்கு சொல்லப்படினும் பொருள் தெளிவாகாமல் இருக்கிற விஷயங்களேயும் பற்றி அவை கூறுகின்றன. 'ஸ்மரணம்' அல்லது ஞாபகத்திலிருந்து எழுதப்பட்டதால் அவைகளுக்கு "ஸ்ம்ருதி" களென்று பெயர். கேட்கப்பட்ட விஷயங்களில் ஞாபகத்தில் தங்கிய சில விஷயங்களே அவை கூறுகின்றன வென்பது பொருள். ஸ்ம்ருதிகள் அநேக முண்டு. இப்பொழுது சற்றேறக் குறைய 128 ஸ்ம்ருதிகள் இருக்கின்றன. இவைகளிற் சில சூத்திர நடையில் எழுதப்பட்டுள்ளன; சில செய்யுள் நடையிலுள்ளன. முக்கியமாய் மநு ஸ்ம்ருதியும், யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியும் பெயர் பெற்றவைகள். இரண்டும் செய்யுள் நடையில் தான் இருக்கின்றன. இரண்டும் நான்கு வருணத்தாரும் தாம் பிறந்தது முதல் இறக்கும் வரை செய்யவேண்டிய காரியங்களே எல்லாம் எடுத்துசொல்லுகின்றன. ஆனல் மநுஸ்ம்ருதி,சொல்லும் விஷயங்களே மிகவும் விரிவாய்க்கூறியும் நூலமைப்பிலும் விஷயத் தொடர்ச்சியிலும் மிகக் குறைவு பட்டும் இருக்கிறது. யாஜ்ஞவல்க்யருடையதோ மிகவும் சுருக்கமாயும் ஆசார அத்தியாயம் வ்யவஹார அத்தியாயம், பிராயச்சித்த அத்தியாயமென்று மூன்று பிரிவுபட்டும், சொல் தொடர்ச்சி நூலமைப்பு முதலியவைகளிற் சிறந்தும் விளங்குகிறது.

ஒவ்வொரு நூலுக்கும் பல ஆசிரியர்கள் உரை எழுதியிருக்கிறார்கள். அவைகளில் மநு ஸ்ம்ருதிக்கு குல்லுகபட்டர் எழுதியிருக்கும் உரையே பெயர் பெற்றது. அது போலவே யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதிக்கு, விஜ்ஞானேசுவரயோகிகள் எழுதியிருக்கும் "மிதாக்ஷரா" உரையே பெயர் பெற்றது. இவ்வுரையின் பெருமையே பெருமை. 'மிதாக்ஷரா' வென்பதை தமிழில் 'சிற்றுரை' யென்று சொல்லலாம். மனு நாரதர், முதலிய அன்னிய நூல்களிலிருந்து சம பாடங்களெடுத்துரைத்தும், தன் முன் வழங்கிவந்த உரையாசிரியர்களின் மதங்களை எடுத்துக் காட்டியும், அவைகளுக்கு வேண்டும்பொழுது சமாதானம் சொல்லியும் அற்புதமாய் எழுதப்பட்டுள்ளது இவ்வுரை. நான் எழுதிய இவ்வியாசத்திற்கு முக்கிய ஆதாரம் அதுவே. நான் சொல்லப்போவது பெரும்பான்மையும் வ்யவஹாராத்தியாயத்தில் முதல் சருக்கத்தின் மொழிபெயர்ப்பேயாகும்.

ஸ்ம்ருதிகள் - அறத்தைப்பற்றிக் கூறுகின்றன. இரண்டாவது வர்ணத்தைச் சேர்ந்த க்ஷத்திரியன் அரசு புரியும் பொழுது நியாய விவேசனம் அவன் கடமை யென்று யாக்ஞவல்கியா கூறுகிறார். ராஜதர்மப் பிரகரணத்தில் அரசன் செய்யவேண்டிய கடமைகளில், நித்தமும், சபையார்களுடன் சேர்ந்து வ்யவஹாரங்களைத் தானே ஆராய்ச்சி செய்யவேண்டிய தென்று சொல்லியிருக்கிறார்.

அதை ஆதாரமாக வைத்து விஜ்ஞானேசுவரர் சொல்லுகிறார் "மகுடாபிஷேகம் முதலியன பெற்றுக் குணங்களுடன் கூடிய அரசனுக்கு குடிகளை பரிபாலிப்பது தான் முக்கிய கடமை. புல்லோர்களையடக்கி யல்லாமல் அக்கடமையை நிறைவேற்ற முடியாது. துஷ்டர்கள் யாரென்று அறிவதற்கு, வ்யவஹார ஆராய்ச்சி செய்தே தீரவேண்டும்.......

வ்யவஹாரம் எத்தகையது, எத்தனைவிதமுடையது, எப்படி நடைபெறுவது என்பதைப்பற்றி, 'இது வரை ஒன்றும், சொல்லப்படாததால், அதை விவரிக்க இரண்டாம் அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகிறது

நிருபன் (=மனிதர்களைக்காப்பவன் = அரசன்) கோபத்தையும் லோபத்தையும் விட்டு விட்டு அறிஞர்களான பிராமணர்களுடன்கூட தர்மசாஸ்திரங்களில் சொல்லிய வழிப்படி, வ்யவஹாரங்களை, நன்று ஆராயக்கடவன், *(யாஜ்)

எதிரிடையாயும் துணையாயும் சொல்லப்படும் வார்த்தைக்கு வ்யவஹார மென்று பெயர். உதாரணமாக ஒருவன் 'இந்த வயல் என்னுடையதென்று சொல்லுகிறான்; மற்றொருவனும், அதற்கெதிராகத் தன்னுடையதென்று சாதிக்கிறான். இவை இரண்டும் வ்யவஹாரங்களென்று பன்மைச்சொல்லால் பலவிதமானது என்பதை விளக்கினர். நிருபன் பார்க்கவேண்டுமென்று உரைத்ததால் க்ஷத்திரியனுக்கு மாத்திரமல்ல இந்தக் கடமை. குடிகளின் பரிபாலனத்திற்கு அதிகாரம் பெற்ற எவனுக்கும் உண்டென்று தெளிவாகிறது. வித்வான்களான என்ற மொழியால் வேதம், இலக்கணம், தர்மசாத்திரங்கள், முதலிய வற்றிற் பயின்றவர்களா யிருக்கவேண்டும் துணை நிற்கும் பிராமணர் என்பது ஏற்படுகிறது.

'பிராமணர்களுடன் கூட' வென்று மூன்றும் வேற்றுமைப் பொருளால், அவர்களுக்கு முதன்மையில்லை, ஆதலால் அவர்களுடன் நியாய ஆராய்ச்சிசெய்யும்பொழுது, ஏதாவது தவறு நேர்ந்தால், அதின் குற்றம் அரசனைத்தான் அடை

---

* "யாஜ்" என்று அடையாளமிடப்பட்டவை, நூலாசிரியராகிய ரிஷியின் செய்யுளெனக்கொள்ள வேண்டும். மற்றது வசனநடையில் தோன்றும் உரை.

யும்; கூடியிருப்பவர்களுக்குக் கிடையாது. அரசன் அந்த சமயத்தில் கோபமும், பேராசையும் அற்றிருத்தல்வேண்டும்.

மேல் கூறிய அந்தணர்கள் அரசனால் நியமிக்கப் பட்டவர்களல்ல. தங்கள் அபிப்பிராயத்தை மீறி அரசன் நடந்தால் அவனைத்தடுக்க அவர்களுக்கு அதிகாரமில்லை ஆதலாலும் தப்புத்தீர்ப்பால் வந்த தோஷம் அரசனுக்கேயாம். அரசன் நியாயம் நடத்தும் சபைக்கு அவர்கள் தானாகவே சென்றவர்கள். சரியான அபிப்பிராயம் சொல்வதோடு அவர்கள் கடமை முடிவு பெறும். கேட்ட கேள்விக்கு பதில்சொல்லாமலிருக்கவும் கூடாது. மநுசொல்லுகிறார், "சபைக்கே போகாமலிருக்கவேண்டும், போனால் சரியாக அபிப்பிராயம் சொல்லவேண்டும். அவையிற் புகுந்து, வாய் திறவாமலோ, தவறு சொல்லியோ யிருப்பவன் பாவத்திற்காளாகிறான்.

இப்பொழுது அரசன் நியமிக்க வேண்டிய சிலவர்களைப் பற்றி சொல்லப்படும் அவர்களுக்கு ஸப்யர் அல்லது ஸபாஸதர் என்று பெயர்.—

"அரசன் ஸபாஸதர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் கேள்வி முறை, படிப்புமுறைகளால் முதிர்ந்த ஞானமுடையவர்களாயும், தர்மத்தை அறிந்தவர்களாயும், மெய் பேசுகிறவர்களாயும், மித்திரனிடத்தும் பகைவனிடத்தும் ஒரு மனதுள்ளவர்களாயுமிருத்தல் வேண்டும்" (யாஜ்ஞ.)

"நாலாசிரியா சொல்லியிருக்கும் குணங்களுடைய ஸபாஸதர்களை, அரசன், தானம், மானம், சத்காரம் இவைகளாற் பிரீதிசெய்து சபையிலிருத்த வேண்டும். 'ஸபாஸதர்கள்,' என்று பன்மையை உபயோகித்ததால், அவர்கள் மூன்று பெயாகளுக்கு குறையாமலிருக்கவேண்டும் ப்ருஹஸ்பதி மகரிஷி எழு, அல்லது, ஐந்து அல்லது மூன்று ஸபாஸதாகளிருக்கவேண்டும் மென்கிறா.

முன் சுலோகத்தில் சொல்லப்பட்ட அந்தணர்களுக்கும் இவ்விடத்திற் சொல்லப்படும் ஸபாஸதர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவர்களது அபிப்பிராயத்திற்கு எதிராக அரசன் நடந்தால் அவனைத் தடுக்கவேண்டியது இவர்களின் கடமையாகும். இல்லாவிட்டால் பாபத்தை யடைவார்கள். முன் சொன்ன அந்தணர்களுக்குச் சரியான அபிப்பிராயம் சொல்ல வேண்டியது தான் கடமை. அரசனைத்தடுக்க அவர்களுக்கு அதிகாரமில்லை.

ஸபாஸதர்கள் ஆசையும் பகையுமற்றிருக்கவேண்டும். நற்குலம், நல்லொழுக்கம், முதிர்ந்தவயது, செல்வம், பொறாமையின்மை, முதலிய குணங்களுடைய சில வணிகர்களையும் அந்தச் சபையிலிருத்த வேண்டும்.

அரசன் தானாகவே சபையிலிருந்து நியாய விசாரணை செய்யவேண்டு மென்று முன் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், "வேறு காரியங்களிருப்பதால், அரசனுக்கு நேராக நியாய விசாரணை செய்ய முடியாமற்போகுங்கால் சப்யர்களுடன் கூடி தன் ஸ்தானத்திலிருக்க சகல தர்மங்களையு மறிந்த ஒரு அந்தணனை நியமிக்கவேண்டும். (யாஜ்ஞ)

இவ்விதம் நியமிக்கப்படுபவன் அந்தணனாகவே யிருத்தல்வேண்டும். காத்தியாயன மகரிஷிசொன்ன குணங்களும் அவனிடத்தில் காணப்படவேண்டும். அவைகளாவன "ஐம்பொறி யாட்சி, உயர்குலத்திற் பிறப்பு, பக்ஷபாத மின்மை, கொடுமை யின்மை. சிதையாநெஞ்சு, மறுமைக்கஞ்சுதல், கோபமின்மை. இத்தகைய அந்தணனில்லாமற் போனால், க்ஷத்திரியனையோ, வைசியனையோ நியமிக்க வேண்டும். இவனுக்கு 'பிராட் விவாகன்" என்று பெயர், இது காரணப் பெயர். பிராட், விவாக என்ற இரண்டு வடமொழிச்சொற்களால் அடங்கியது. வாதியும் பிரதி வாதியும் சொல்கிறதை கேட்கிறான்

(ப்ரச்சம் செய்கிறான்) என்றதால் பிராட், அவர்கள் சொற்களிலுள்ள, நியாய அநியாயங்களை சப்யர்களுடன், 'விவேசனம்' அல்லது ஆராய்ச்சி செய்கிறானென்று 'விவாக' ஆதலால் இருகக்ஷியும் சொல்வதைக் கேட்டு நியாயம் செய்வதால் பிராட் விவாகன் என்ற பெயர் பெறுகிறான்.

பிராட் விவாகன் முதலிய சப்யர்கள் பக்ஷபாதம் முதலிய வற்றால் தர்மத்திற்கு விரோதமாய் நியாய விசாரணை செய்தால் அரசன் என்ன செய்யவேண்டு மென்று சொல்லுகிறார்.

"பக்ஷபாதத்தாலாவது, பொன்னாசையாலாவது, பயத்தாலாவது, ஸ்ம்ருதிகளுக் கெதிராக நடக்கும் சப்யர்கள் ஒவ்வொரு வரையும் விவாதத்திற் பந்தயமாய் கூறப்படும். தொகையில் இரண்டு பங்கு தொகை கொடுக்கும்படி தண்டிக்கவேண்டும்."

இந்த தண்டனை, மேற் கூறிய காரணங்களுக்குத் தான் விதிக்கப் படலாம். அறிவின்மையால் சப்யர் பிழைசெய்தால் அதற்கு தண்டனை கிடையாது.

(தொடரும்)